REG. No M. 2997.

தனிப்பிரதி அணு 1.

VITTAGAM

ஆசிரியர்.
ச. கந்தையபிள்ளை

LeRédacteur
S. CANDIAH PILLAI

# வித்தகம்

ஒரு செந்தமிழ் வாரப் பத்திரிகை

.VOL. III | புதுவை, தாது ஹூ ஆனி மீ ௨௬௳ (9—7—36) | No.30

## சுந்தரர் தேவாரம்.

அறிவி னுல்மிக்க அறுவகைச் சமயம் அவ்வவர்க் கங்கே யாரருள் புரிந்து
எறியு மாகட லிலங்கையர் கோனைத் துலங்க மால்வரைக் கீழடர்த் திட்டுக்
குறிகொள் பாடலின் இன்னிசை கேட்டுக் கோலவாளொடு நாளது கொடுத்த
செறிவு கண்டுநின் திருவடி யடைந்தேன் செழும்பொ ழிற்றிருப்புன்கூருளானே.

சப்ப மால்களிற் றின் னுரி யானைக் காமற் காய்ந்ததோர் கண் ணுடை யானைச்
செப்போ னேயொக்குந் திருவுரு வானைச் செழும்பொ ழிற்றிருப் புன்கூ ருளானை
உப்ப ராளியை யுமையவள் கோனை யூரன் வன்றொண்ட னுள்ளத் தாலுகந்
தன்பி னாற்சொன்ன அருந்தமி ழைந்தோ டைந்தும் வல்லவ ரருவினை யிலரே.

## MECHANISM OF LIFE

SIR J. C. BOSE'S LECTURE.

(Cont. from 30—4—36 issue.)

### ELECTRO-MAGNETIC PHYTOGRAPH.

There had hitherto been no means available for detection of the flow of sap and for measurement of its rate. I discovered that a horizontally spread leaf may be regarded as an outstretched arm which by its movement up or down signals the pumping activity of sap. Under drought the pumping is arrested and the leaf begins to drop. A stimulating agent increases the pumping action and the leaf begins to be erected. These imperceptible movements becomes highly magnified by the new electric writer which has been just perfected. Observe how the writer is puncturing marks of movement seen on the screen as brilliant dots of light. I gave the plant a dose of bromide of potassium, note how the plant arm is falling, automatically tracing line of light the increasing depression. A stimulating dose of coffee is next applied; the growing depression now becomes arrested and the exuberance produced by the stimulating drug is seen in the rising curve of light. The dumb life has now become the most eloquent witness.

The normal activity of the animal heart and the change induced under drugs can be found directly from the records given by Cardio graph, which is essentially a magnifying lever. I find however that the instruments in use for this purpose are faulty, in as much as the accuracy of the records is greatly vitiated by the friction between the writer and the recording surface. The exact periods of systle and diastole more over cannot bie accurately made out. The Resonant Recorder I have devised completely removes all error, and the time relation of every phase of cardiac pulsation becomes recorded to hundredth part of a second.

The change of cardiac activity can also be indirectly obtained by the pressure variation on the artery, recorded by the Sphygmo-graph. When the activity of heart pump is increased, the blood pressure is increased, a depresant producing the opposite result. The radial artery on the wrist is on the surface and it is not diffi ult torecord its pulsation. But no record is possible when the artery is buried under other tissues.

### THE OPTICAL SPHYGMOGRAPH.

Turning next to the plant any attempt to feel its pulse would by the very nature of the case, appear to be hopeless. If the plant propelled the sap by periodic pulsation of the active layer, the amount of expansion and contraction of each pulse would be beyond even the highest powers of the microscope to deburied in the interior of the plant; how tect. The active cells are more over, buried the interior of the plant how could the invisi-ble and hidden be rendered visi-ble?

I nevertheless ventured on what at first appeared as imposi-sible and attempted to record the pulse-throb during the passage of the sap-stream as it is pumped up along the stem. The passage of each pulse is attended by an infinitesimal expansion after the brief-passage of the pulse-wave, the stem would revert to its original diameter. In the case of identical mechanism in plant and animala caridac stimulunt would make the heart-pump of the plant act more energetically driving the sap, faster, causing agreater inflation of the stem. Under depressants the change would be of an opposite character. For recording these infinitesi-mal dilation or contraction, it was necessary to construct artificial organs of perception of surpassing delicacy and sensitiveness. The Plant-Feeler or the Optical sphymograph, which I have devised, consists of two rods, one of which is fixed and the other movable, the stem of the plant being placed between the two. The movement the end of the free rod is further magnified by an optical device, the total magnification being five million times. When a dead plant is placed on the apparatus, the indication of line of light remains quiescent, its pulse-beat having been still in death. But the imperceptible pulse-beat in the living plant is out wardly manifested by the alternate swing of the beam of light. The frequeney of the beat is about once in five seconds. A depressing agent causes diminished pressure shown by the rush of light to theleft whereas increased pressure caused by a stimulant produces a rush of light-beam to the right. The waxings and wanings of life are thus for the first time revealed by the moving trail of light.

Drungs and alkaloids produce modifications of pulse beat of animal and plant which are extra-ordinarily similar. Those which stimulate the cardiac activity also stimulate the propoulsive activity in the plant; depressants, on the otherhand, induce opposite effects in both.

(To be continued)

...ள்நாட்டிற்கு
வருட சந்தா ரூபா 3.

ஆசிரியர்:
யாழ்ப்பாணம்
தென்கோவை.
ச. கந்தையபிள்ளை
தமிழ்ப் பண்டிதர்,
சிலோன்

வெளி நாட்டிற்கு
வருட சந்தா ரூபா 4.

LE REDACTEUR
TENKOVAI
S. CANDIAH PILLAI
Tamil Pandit
Jaffna
CEYLON.

RÉPUBLIQUE FRANÇAISE
LIBERTÉ—ÉGALITÉ—FRATERNITÉ

VITTAGAM

JOURNAL HEBDOMADAIRE PARAISSANT LE JEUDI


# வித்தகம்


வியாழக்கிழமை தோறும் வெளிவருவது.

Bureau de la Direction :—
RUE D'AMBALATADOU AYER
MADAM, NO. 2,
Pondichéry.


நத்தம்போற் கேடு முளதாகுஞ் சாக்காடும்
வித்தகர்க் கல்லா லரிது.

குறள்.


காரியாலயம் :—
அம்பலத்தாடு ஐயர் மடத்து வீதி,
நெம் 2,
புதுவை.

VOL. III. | புதுவை, தாது ஹூ ஆனி மீ உசு உ (9—7—36) | NO. 30.


## சுத்த சாதகம்.

அருளுருவடிவேமுன்னியல்பான்மா
வாணவ விருளுருமன்றே

இருளுருசுழுத்திவிழுங்கிமேதனுக்
கிந்தமாயையின்சிருட்டியதாம்

மருளுருகனவுவிழுங்கிடுமேதற்கு
வந்ததுபிரணவசிருட்டி

தெருளுருமந்தப்பிரணவம்விழுங்கத்
திகழுமவ்வருட்சிருட்டியதே.

மருள்வடிவதனினீங்குதலின்றி
மற்றுமொன்றறிவிலாக்குழந்தை

வெருவருங்குமாரந்தருணமுப்பென்றே
விளங்குதல்போலவான்மாவும்

அருள்வடிவதனினீங்குதலின்றி
யாணவமாயையோவருளாய்ப்

பருவமற்றவையிலந்தவடிவாய்ப்
பண்டுபோன்முடிவினின்றிடுமே.

உ

திருவருள் துணை.

ஓம்
நந்திபதி
கோல்

காலமுண் டாகவே காதல்செய்
துய்மின் கருதரிய
ஞாலமுண் டானொடு நான்முகன்
வானவர் நண்ணரிய
ஆலமுண் டானெங்கள் பாண்டிப்
பிரான்றன் அடியவர்க்கு
மூலபண் டாரம் வழங்குகின்
றுன்வந்து முந்துமினே.

[திருவாசகம்]


# வித்தகம்

புதுவை

தாது ௵ ஆனி மீ ௨௬௳


## வெகுளி.

மெய் என்னும் திரு நாமம் பொய் படாதவாறு அதற்கு இலக்கியமாகிய தக்க இல் என்னும் தூய யாக்கை உடையராய்,

அத்தகைய வாய்மை என்னும் உரன் உடைத்தாகிய இல்லின் பெட்பெனத் திகழும் சத்துவ ரஜோ குணத் தலைமையாகிய வெகுளியால் ஐம்புல வேடர்களை வென்று—மாற்றி,

மனமும் மதியும் ஒன்றுதலால் மனமே மதியாய் மதி என்னும் மந்திரியாய் அமைதலால்,

முன்னிலைகளின் பெட்பறிந்து அவற்றை அடிப் படுத்தி மூவுலகும் கோலோச்சித் தமது சொல்லாலும் அருட் புதுமைகளாலும் உண்மைச் சைவ நன்னெறி யாகிய சத்திய நெறியை நிலைநாட்டிய வித்தகச் சித்தர் பெருமானும் எமது இடைக்காடர் திருவாய் மலர்ந் தருளிய

மூவடி முப்பது என்னும் தெய்வத் தமிழ் மறையில் அறக் கூறு என்னும் மூன்றுவது அத்தியாயத்தில் ஐந்தாம் சூக்த மகுடமாகி மிளிர்வது "வெகுளி" என்பது.

இதற்கு முந்திய சூக்த மகுடமாகிய "கோடமை" என்பதன் பண்பும் பயனும் "வித்தகம்" தொகுதி 3 இல. 29இல் ஷ சூக்தம் நுதலிய வாற்றான் ஒரு சிறிது கூறப் பட்டன.

ஈண்டு "வெகுளி" என்பதன் பண்பும் பயனும் ஒரு சிறிது சுருங்க உரைக்கப் படும்.

சரமும் அசரமுமாகிய சீவ வர்க்கங்களின் தூலத்துள்ள காரமான அழுக்குக்களை நிறை கண்டு பஞ்சீகரணித்தே —உட் கொண்டே தன்னிலை யாகிய உடலுயிரில் உள்ள — தூலத்துள்ள அழுக்கை அகற்றி உய்தி பெற வேண்டும் எனவும்,

தனக்குக் கேடு விளைக்கக் கூடிய முன்னிலை வினை ரூபங்களுக்கு அஞ்சாது அவற்றைத் தண்டித்து

அஃதாவது — முன்னிலை யாகிய தூலம் தனக்கு வசமாதற்கு ஏற்ற தண்டனைகளால்—இச்சையால் தனக்குக் கேடு விளைக்கும் ஐம்புல நுகர்ச்சிகளில் செல்லும் பொறிகளை

விரதாதிகளால்—இச்சையை நிறையுட் புகுத்துதலால் அடக்கித் தண்டித்து வசப் படுத்தித் தற்கொலையின்றி — சாதல் நீங்கி வாழ்தல் வேண்டும் எனவும்,

பற்பல உபாயங்களால் — சாதன நிறை பேதங்களால் — பகுப்புணர்வில்லாத ஐம்புல நுகர்ச்சிகளை மாற்றி அவற்றை மதி எனும் உணர்ச்சி வடிவமாக்கித் தனக்கு மதி மந்திரி என அமைத்துக் கொள்ள வேண்டும் எனவும்,

இவையெல்லாம் சீவகாருண்ணியம் பற்றிய செயலேயன்றி உலக மாக்கள் கருதுவது போலக் "கோடமை" பற்றிய செயல் அல்ல எனவும் மேலைச் சூத்திரத்தால் கூறிப் போந்த புலவர் பெருமான்

"வெகுளி"

என்னும் இச் சூத்தத்தால்,

அப் பெற்றி கையநதற் குரிய சத்துவ ரஜோ குணமாகிய வெகுளியின் பண்பும் பயனும் கூறுகின்றார் என அறிதற் பாற்று.

### மூவடி முப்பது.

———

அறக்கூறு—3.

வெகுளி—சூக்தம் 5.

மெய்புரனில்குணம் வெகுளியே யத்தாற்
சிறியரைக் கடிதலுந் தீமைச் சுறுத்தலும்
பெருமை பேணலும் பெறுதலி னன்றே.

என்பது சூக்தம்.

சத்துவத்தில் ரஜோ குணத் தலைமை பெறுதலாகிய வெகுளியின் பண்பும், ஐம்புல வேடரை அடக்கிச் சாதலைத் தவிர்த்து உடலில் பெருக்க மடையும் ஆகாச பூதத்தைப் பேணுதலாகிய அதன் பயனும் உணர்த்துதல் நுதலிற்று இச் சூக்தம் என அறிக.

வெகுளி என்பது புறத்தே தோன்றும் கோபம் என்னும் குணத்தின் தீவிர நிலை எனவும், அது நோய் முதலிய வற்றால் வலிபற்ற யாக்கைக்கு உரிய குணம் எனவும்,

தன்னிற் சிறிய ராயினூர் தன்னை வருத்தாதவாறு அவரைக் கடிந்து ஓச்சுதற்கும்,

தன்னை அடைதற் குரிய தீமை தன்மேற் செல்லாத வாறு அச்சுறுத்தி விடுதற்கும்,

மெலிந்த தன்னிலை புறத்துப் புலனுகாதவாறு தன் பெருமையைக் காத்துக் கொள்ளுதற்கும்

உரியதாய் அமைதலால் அன்ன வெகுளி யுடைமை நன்றே எனவும்,

எம் போலிய உலகியலுக்கு ஒப்பிய படிப்பாளிகள் அவ் உலகியலுக்கு ஒப்பிய வாறு பொருள் காணும் படியும்,

உண்மையை நாடும் ஆற்றலுடையார் அதனைக் குரு வருளால் உணர்ந்து உய்தி யடையும் படியும் அமைக்கப் பட்டது இச் சூக்தம் என்க.

காமம், கோபம், லோபம், மோகம், மதம், மாற்சரியம் என்னும் அறுவகைக் குறும்புக ளாகிய குற்றங்கள் அசுத்த தநுவுடைய — மருளுடம்பினர்களாகிய சீவர் யாவர்க்கும் இயல்பாகவே அமைந்த குணங்களாம்.

இவை ஒரு குலையின் கண் உள்ள தேங்காய்கள் போல உடலுயிராய் அமைந்த அசுத்த நிறையின் காரியமாகி உள்ளன.

ஆதலால் ஒரு குணம் வெளியே தோன்றப் பெறும் ஒருவன் மற்றைய குணங்களையும் பூரணமாக உடையவனே என்பதில் எட்டுணையும் ஐயமில்லை

ஒருவன் தனக்கு முன்னிலைகளான் வரும் துன்பங்களை நீக்குதற் பொருட்டுக் காமம், கோபம் முதலிய குணங்கள் புறத்துப் புலனுகாதவாறு தற் சுதந்திரத்தால் சாமர்த்தியமாக அவற்றை ஒருவாறு அடக்கிக் கொண்டு, அவை இல்லாதவன் போல நடிக்க வேண்டியது — போலிச் சத்துவம் வகித்து ஒழுக வேண்டியது ஒரு வகையான லௌகிக தந்திரமே யன்றி,

இத்தகைய நடிப்பு மேலே கூறிய தீய குணங்கள் உரிய சாதகங்களால் மாற்ற மடையப் பெற்ற — இரு வினை ஒப்பு மல பரிபாகம் வாய்ந்து அமல முதற் படி கண்ட மெய் யடியார்க் குரியதாய், நித்தியத்துவம் அளிக்கும் வாய்மையான சத்துவ மன்று என அறிதல் வேண்டும்.

சில காரணங்களால் சில குணங்கள் புறத்தே தோன்றாது மறை பொருளாய் இருக்கப் பெறும் ஒருவனை அவை நீங்கப் பெற்றவன் என மதித்துப் போற்றுவது அறியாமையே ஆம்.

ஏன்? மறைந்திருந்த அக் குணங்கள் தருணம் வாய்ந்த விடத்து அதி தீவிரமாய் அவன் பால் வெளிப் பட்டு அவற்கும் பிறர்க்கும் தீமை விளைத்தல் திண்ணம்—கண் கூடு ஆதலால் என்க.

மாயா காரிய மாகிய காமம் முதலிய குணங்களை ஆயுதங்களாகக் கொண்டே இறைவன் படைத்தல் முதலிய ஐந் தொழில்களையும் உஞற்றுகின்றான்.

இவ் ஐந் தொழிலாகிய இறைவன் கூத்தைக் கண்டு களிகூர்ந்து தம் செயலற்று—"தற் சுதந்தரம்" ஒழிந்து நிறை தழுவி ஒப்புர ஒழுகி அமைதி யுற்று உய்தி யடைய அறியாத

எம் போலிய சீவர்கள் இவ் ஆயுதங்களைத் தங்கள் உடைமை எனத் துணிந்துஇறைவன் பால் இவற்றைக் களவாண்டது மன்றி,

இவற்றை நிறை முறை யோடு வழங்குதற்கு ஏற்ற பழக்கம்—பயிற்சி இல்லாதவர்களாதலால் அகங்கார மமகார சொரூபிகளாய் நின்று இவற்றை இஷ்டம் போல—இச்சைப் படி நேர்ந்த வாறு நிறை முறை இன்றி வழங்கி இவற்றால் தங்களைத் தாங்களாகவே கொலை செய்து கொள்ளுகின்றனர்—தற் கொலை புரிகின்றனர்—வம்பு பழுத்து மாண்டு பிறவி வலைப் பட்டு உழலுகின்றனர் என அறிதற் பாற்று.

உடலம் வம்பு பழுத்து மாண்டு போகாது நித்தியத்துவம் பெற வேண்டும் என வற்புறுத்தி யருளியது மணிவாசக சிவம் அல்லவா?

## திருவாசகம்.

———

கொம்பி லரும்பாய்க் குவிமலராய்க் காயாகி
வம்பு பழுத்துடல மாண்டிங்ஙன் போகாமே
நம்புமென் சிந்தை நணுகும்வண்ணம் நான
[ணுகும்
அம்பொன் குலாத்தில்லை யாண்டானைக்
[கொண்டன்றே.

(ஷை குலாப்பத்து- செ.6.)

## கைவல்லியம்.

———

"இந்தச்சீவனுல்வரும்அறுபகையெலாம்
[இவன்செயல்அல்லாமல்
அந்தத்தேவனுல்வருமென்றமூடர்கள்
[அதோகதியடைவார்கள்
......................................."

என ஆன்றோர் கூறியதும் அறிக.

ஆதலால் இவ் ஆயுதங்களைக் களவாண்ட சீவர்கள் தங்கள் அறியாமைக்கு இரங்கி இறைவனைப் போற்றி அவன் அருள் வழி நின்று ஷை ஆயுதங்களை நிறை முறையோடு வழங்கி — பயன் படுத்தி இவற்றின் தீய இயல்பை மாற்றி உய்தியடைதலை வேண்டற் பாற்று — செயற் பாலது என்க.

குரு வருளால் பெறப் படும் உரிய சாதகங்களால் — நிறை முறையான சிற்றின்ப வாழ்க்கையாகிய சிறு வாழ்வினால் இக் குணங்களை மாற்று

தல் வேண்டும். அஞ்ஞான்று அசுத்த காமம் உயர்ந்தோர்க் குரிய காமமாகிய காதற் காமமாக — காதலாக — தூய காமமாக மாற்ற மடையும்.

கோபம் வெகுளி யாக மாற்ற மடையும். இவற்றோடு தொடர்புடைய மற்றைய குணங்களும் ஏற்ற பெற்றி மாற்ற மடையும் என்க.

இக் குணங்கள் இவ்வாறு மாற்ற மடைந்த போது தான் பாசங்கள் பற்றுக்கள் ஒழியும். பின் இவற்றின் நாமமும் கெட்டு வீடு கைகூடும் என்க.

## குறள்.

———

காமம் வெகுளி மயக்க மிவைமூன்றன்
நாமம் கெடக்கெடு நோய்.

(ஷை 36 அதி. மெய்யுணர்தல் செ. 10)

என்றனர் பொய்யில் புலவர்.

இவ் அரிய பெரிய உண்மைகளை யெல்லாம் மறை பொருளாக அடக்கி வைத்தே பின் வரும் பாசுரத்தால் கூறி யருளியது மணிவாசக சிவம் என அறிதற் பாற்று.

## திருவாசகம்.

———

மையலார் மையலிலே தாழ்ந்துவிழக்
[கடவேனைப்
பையவே கொடுபோந்து பாசமெனும்
[தாழ்உருவி
உய்யுநெறி காட்டுவித்திட்டு..............'

(ஷை அச்சோப் பதிகம் செ. 7)

ஆசான் உலகியலாகிய சிறு வாழ்வில் தம்மைப் பையப் பையக் கொடு போந்து மையல் என்னும் அசுத்த காமம் முதலிய தீய குணங்களை மாற்றி—பாசங்கள் பற்றுக்களை நீக்கி நித்தியத்துவ நெறி காட்டிய திறனை மணிவாசகர் இப் பாசுரத்தால் சுருங்கக் கூறி விளங்க வைத்தமை காண்க.

மைய லாயிந்த மண்ணிடை வாழ் வெனு
[மாழியி லகப்பட்டுத்
தையலா ரெனுஞ் சுழித்தலைப் பட்டுநான்
[தலைதடு மாறுமே
பொய் யெலாம் விடத்திரு வருள்தந்து
[தன்பொன் னடியிணைகாட்டி
மெய்ய னுய்வெளி காட்டி முன்னின்ற
[தோரற்புதம் விளம்பேனே.

(ஷை அற்புதப்பத்து செ.1.)

என அருளிச் செய்யப் பட்டதும் அறிக.

"போய் யெலாம் விடத் திருவருள் தந்து" என்பதனால் அசுத்த மாயா காரியமாகிய மையல் என்னும் அசுத்த காமமும் அதற்கு இனமாகிய கோபம் முதலிய குணங்களும் மாற்ற மடைந்தமை கூறப் பட்டது.

மையல் என்னும் அசுத்த காமம் காதற் காமம் என்னும் தூய காமமாக மாற்ற மடையவே மற்றைய கோபம் முதலிய தீய குணங்கள் வெகுளி முதலியனவாக மாற்ற மடைந்து நன்மை பயந்தமை கூறாமலே அமையும்.

'சிறியாரைக் கடிதல்"

என்பதற்கு வயசு அறிவு முதலிய வற்றால் சிறியராய மக்கள் முதலியோர் குற்றம் புரியுங்கால் அவரைக் கடிந்து நன்னெறிப் படுத்தல் என உலகியலுக்கு ஒப்பியவாறு பொருள் கூறினும் ஆம்.

கோபம் என்பது மற்றைய தீய குணங்கள் போலவே மருளுடம்பின ராகிய சீவர் யாவர்க்கும் இயற்கையான் அமைந்துள்ளதே எனினும்,

நோய் வாய்ப் பட்டு மெலிந்த சரீர முடையார்க்கு மனமும் பொறிகளும் நன்று வசப்படாது அவச் சலன மிகுதலால், அவர் பால் எஞ்ஞான்றும் தீவிர நிலை அடைந்து வெளிப் பட்டே நிற்கும்.

கோபம், சினம், சீற்றம் என்பன பொது வகையான் ஒரே பொருளில் வழங்கப் படுவன வாயினும் சில வகையால் தம்முள் வேறுபாடுடையன என்றே கூறற் பாற்று.

வெகுளி என்பதும் காரண காரிய ஒற்றுமை நயம் பற்றி இவற்றோடு ஒருங்கு சேர்த்து உலகியலுக்கு ஒப்பிய வாறு நூல்களில் வழங்கப் படினும் பொருளால் மிக்க வேறுபாடு உடையதே ஆம்.

அசுத்த மடைந்த மூலாக்கினியின் காரியமே கோபம் என்பது. இது மனதைப் பற்றி நிலைக்கும் கால் சினம் எனப்படும். இதனால் அசுத்த நிறை அதிகரிக்கின்றது. அமல நிறை என்னும் சத்துவம் கேடடைகின்றது.

பின் வரும் தேவர் திருவாக்கு இவ் உண்மையை நன்று புலப்படுத்துவ தாகும்.

## குறள்.

———

சினமென்னுஞ் சேர்ந்தாரைக் கொல்லியின்
[மென்னும்
ஏமப் புணையைச் சுடும்.

(ஷை 31-ம் அதி. வெகுளாமை செ.6)

சாதலுக்குக் காரணமான சினம் என்னும் அசுத்த அக்கினி யானது, நமது உடலகத்து நமக்கு இனமாய்— பற்றுக் கோடாய் உள்ளது என்று வேதங்களால் போற்றப் படுவதாய் நம்மைத் தாங்கிக் கொடு சென்று நித்தியமாகிய கரையில் சேர்க்கும் தோணி போன்ற அமல நிறையையும் அழித்து விடும் என்பதாம்.

அமல நிறை அமல ஒளி அமல ஒலி சத்துவம் சிவம் என்பன ஒன்றே. ஏமப்புணை—ஏமமாகிய புணை; ஏமத்தை அளிக்கும் புணை; எம்மை இரட்சிக்கும் தோணியாய் "உற்ற ஆக்கையின் உறு பொருள்" ஆய் உள்ள எம் பெருமான் திருவடி.

குழலொலி கூத்தொலி ஏத்தொலி

யாகிய—அமல ஐகார ஒலியாகிய இத் தோணியால் தாம் கரை யேறிய உண்மையையே,

## திருவாசகம்.

———

"…………பெருந்துறைப்பெருந் தோணி
[பற்றி உகைத்தலும்
காணெ ணுத்திருக் கோலம் நீவந்து காட்டி
[னாய்கழுக் குன்றிலே."

(ஷை திருக்கழுக்குன்றப்பதிகம். செ. 4)

என்னும் மறை மொழியால் அருளிச் செய்தனர் மணிவாசகப் பிரபு.

சினம் என்னும் சேர்ந்தாரைக் கொல்லி சரீரத்தைப் பற்றி நிற்றலால் அசுத்த நிறை பெருக்க மடைய அமல நிறை கேடடையும்—புரிசடைபோன் புறப்பட்டுப் போய் விடுவான் என்பதும்,

அதனால் உடல் பிணமாகி விழுதலாகிய சாதல் உளதாகும் என்பதும் இதனால் நன்று வலியுறுதல் கண்டு கொள்க.

பின் வரும் தேவர் திருவாக்குக்களும் இவ் உண்மையையே வலியுறுத்த எழுந்தன ஆகும்.

## குறள்.

———

அறவாழி யந்தணன் தாள்சேர்ந்தார்க்
[கல்லால்
பிறவாழி நீந்த லரிது.

பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவ னடிசேரா தார்.

(ஷை 1-ம் அதி. கடவுள் வாழ்த்து செ.8, 10)

சுய நலமே கருதி நம்மை அடிப்படுத்துமாறு ஓவாது முயலும் முன்னிலைகளின் தீய அசைவுகள்—சிந்தனை சொற் செயல்கள் காரணமாக நம்பால் ஆக்க முறும் சண்டாளக் கோபம் நமது அறிவு வீற்றிருக்கும் செறிவுடை மனத்தை ஓவாது அவச்சலன மடையச் செய்து தீவினை விளைத்தலால் மிகக் கொடியதே ஆம்.

"………………………பொல்லாச்
சண்டாளக்கோபத்தைச்சாதித்துக்
[கொல்லு.

என்றனர் கடுவெளிச் சித்தர். சாதித்துக் சொல்லுதல்—குரு வருளால் பெறப் படும் உரிய சாதகங்களால் மாற்ற மடையச் செய்தல்.

குரு வருளால் பெறப்படும் உரிய சாதகங்களாற்றான் கோபம்—சீற்றம்—சினம் என்பன வெகுளியாய் மாற்ற மடைந்தா லன்றி, தற் சுதந்தரத்தால் இவற்றை நீக்குதல் முடியாதகாரியமே.

மேல் இச் சூக்தத்தின் உண்மைப் பொருள் ஒரு சிறிது கூறப்படும்.

"மெய் உரன் இல் குணம் வெகுளியே"

என வெகுளியின் இலக்கணம் கூறி அதனால் ஆம் பயனும் கூறுகின்றார் புலவர்.

வாய்மை என்னும் உரனை உடைத்தாய விமல யாக்கையின் குணம் வெகுளியே என அதன் பெட்புக் கூறப் பட்டது.

ஒருவன் தன்னைத் தான் திருத்திக் கொண்டால் அவன் முன்னிலையாகிய தூலத்துள்ள ஐம்புல வேடரை—மற்றைய முன்னிலைகளை திருத்துமாறு கையாள வேண்டிய கருவிகளில் தலையாயது வெகுளியே; கோபமன்று. கோபம் வெகுளி என்பன பொருளால் மிக்க வேறுபா டுடையன ஆகும்.

உரிய சாதகங்களால் கோபம் கெட்டுத் திரிந்தே—மாற்ற மடைந்தே வெகுளி யாகின்றது.

கோபத்தால் தீமையும் வெகுளியால் நன்மையும் உண்டு.

விமல யாக்கை உடைய மெய்யடியார்க்கு உரியதாகிய சத்துவ ரசோ குணத் தலைமையின் பண்பே வெகுளி எனப் படுவது.

தன்னைத் தான் திருத்திக் கொண்டவன் யார்? எனின்,

அவனே "வாய்மையின் வித்து" (மூவடி முப்பது, அறக்கூறு–சூக்தம்2) என்பதற்கு ஒப்ப,

மெய்யாகிய வாய்மையே உரனாக அமைந்த இல்லாகிய உடலை உடையான்—விமல யாக்கை யாகிய ரசனை தேக முடையவன்;

உடலுயிர் இயக்க ஒருப் பாடாகிய இரு வினை ஒப்பு மல பரிபாகம் வாய்க்கப் பெற்றவன்—அமல முதற் படி கண்ட மெய் யடியான் என்க.

இவ்வாறு மாற்றமடைந்த மெய்யடியான் குணம்—"மெய் உரன் இல் குணம்" வெகுளியே.

இப் பெற்றி கைவரப் பெறுத எம் போலிய அசுத்த தநு வுடையார் குணம்—அசுத்த தநுவின் குணம் கோபமே—சினமே—சீற்றமே என்க.

இவ் வெகுளியால் ஆம் பயன் என்னை? எனின், ஷை சூக்தம் நுதலிய வாறு சிறிது கூறுதும்:—

1

அத்தால் சிறியரைக் கடிதலும்

2

தீமை அச்சுறுத்தலும்

3

பெருமை பேணலும்

பெறுதலின் நன்றே.

அ

அவ் வெகுளியால், சிற் றினங்க

ளாகிய ஐம்புல வேடர்களைக் கடிந்து-- அவ் வேடர்களின் தீய அசைவுகளை அறுத்து அடக்கி ஆளுதலும்,

ஆ

அவ் அசைவுகளால் ஆய சாதல் தன்னைப் பரிசிக்கா வண்ணம் அதனை வெல்லுதலும்,

இ

உடலகத்துச் சிதாகாசம் பெருக்க மடைந்து பேணப் படுதலும்,

பயனாகி அமைதலால் அவ் வெகுளி நன்றே--அவ் வெகுளியால் நன்மையே உளதாகும் என்பது.

தாமதத்தில் ராசதமும் ராசதத்தில் ராசதமும் நிவிர்த்தி மார்க்கத்துக் குரிய நன்மை பயக்கும் குணங்களாகா.

இவை மறத்தாற்றிற்கே யன்றி அறத்தாற்றிற்கு உரியன வாகா.

மேல் இவ் உண்மைப் பொருள் சிறிது விளக்க முற உரைத்து இக் கட்டுரை முடிக்கப் படும்.

சிறியுரைக் கடிதலும்

சிறியரைக் கடிதல் என்பது சிற் றினங்க ளாகிய கீழ் நிறைப் பொலி வுடைய ஐம்புல வேடர்களைக் கடிதல்.

அஃதாவது ஐம்புலத் தாறு ஓம்பல் என்பது; ஐம் புலன்களாகிய முன்னிலைகளில் நிறை பிறழ்ந்து செல்லும் பொறிகளை நிறையுட் புகுத் துதல்; அற நெறியி னின்றும் வழு வாமல் காத்தல் என்பது.

அசுத்த ஐம்புல வேடரைச் சுத்த நிறை பெறச் செய்யும் நெறியைக் கடைப் பிடித்து அமல மாக்குதல் என அறிதல் வேண்டும்.

இடப தேகயாகிய விமல யாக்கைக் குரிய சத்துவ ரசோ குணத் தலைமை யாகிய வெகுளியால் ஐம்புல வேடர் மாற்ற மடைதலைப் பின் வரும் அப்பர் அரு மறைப் பாசுரம் குறிப்பால் தெரிப்பதை நுண்ணுணர்வால் கண்டு தெளிக.

## அப்பர் தேவாரம்

நீற்றினனிமிர்புன்சடையான்விடை
ஏற்றினனமையாளுடையான்புலன்
மாற்றினன்மயிலாடுதுறையென்று
போற்றுவார்க்குமுண்டோபுவி
[வாழ்க்கையே.

(ஷை திருமயிலாடுதுறை—திருக்குறுந் தொகை பாசு. 7)

வெகுளி என்னும் சத்துவ ரசோ குணத் தலைமை மரபுடையோரோ துஷ்ட நிக்கிரக சிஷ்ட பரிபாலகரு மாவர். இவர் வெகுளியால் வெகுளப் பட்டோர்க்கும் பிறர்க்கும் நன்மையே விளைவதாகும்.

சத்துவ குணப் பொலிவுடைய மெய் யடியார் குணமே வெகுளி எனவும், அதன் ஆற்றல் அளவிடற் கரியது எனவும்

## குறள்.

குணமென்னும் குன்றேறி நின்றார் வெகுளி
கணமேயும் காத்த லரிது.

(ஷை 3-ம் தந். நீத்தார் பெருமை செ.8)

என்னும் தேவர் திரு வாக்கும் நன்று வலியுறுத்துதல் காண்க.

ஞானசம்பந்தர் முதலிய மெய் யடியாரும், இருடிகள், முனிவர்கள் சித்தர்கள் என்னும் திரு நாமத்துக்கு வாய்மையில் இலக்கியமாகி வதிந்த மகான்களும்

சத்துவ ரசோ குணப் பண்பாகிய வெகுளியால், சிவாபராதிகளாகிய சிற் றினங்களைத் திருவருட் சம்மதமாகக் கடிந்து — நிக்கிரகம் செய்து அவ் வாறு நிக்கிரகம் செய்யு முகத்தால் அச் சிற்றினங்களது சிவாபராதத் தீவினையைக் களைந்து அவரையும் அவரால் அலக்கணுற்ற சிட்டரையும் புரந்து சத்திய நெறியை நிலை நாட்டி யமை அவ் வவர் மறைகளால் அறியக் கிடக்கின்றது.

## ஞானசம்பந்தர் தேவாரம்.

வேதவேள்வியைநிந்தனைசெய்துழல்
ஆதமில்லிஅமணொடுதேரரை
வாதில்வென்றழிக்கத்திருவுள்ளமே
பாதிமாதுடனாயபரமனே
ஞாலநின்புகழேமிகவேண்டுந்தென்
ஆலவாயிலுறையும்எம்ஆதியே.

(ஷை திருவாலவாய்-பண்-பழம்பஞ்சுரம் பா1.)

இத்தகைய செயல்கள் எல்லாம் வெகுளியால் நிகழ்ந்த நன்மைகளே யன்றி — சீவ காருண்ணியச் செயல் களே யன்றி,

தற் காலத்தவர் சிலர் பலர் கருது வது போல, உலக மாக்களுக் குரிய கோபம் என்னும் அசுத்த குணம் பற்றிய தீவினைக ளாகா என்பது நன்று கடைப் பிடிக்க.

சாபாநுக் கிரகங்களும் வெகுளியால் நிகழும் சீவ காருண்ணியச் செயல் களே ஆம். விரிப்பிற் பெருகும்.

"தீமை அச்சுறுத்தலும்"

சிற்றினமாகிய ஐம்புல வேடரைக் கடிந்து — அவர்களால் ஆய நிறை முறை இல்லாத தீய அசைவுகளை அறுத்து அவ் அசைவுகளால் ஆய சாதல் தன்னைப் பரிசிக்கா வண்ணம் அச்சுறுத்துதலால் உரிய சாதகங் களைக் கைக்கொண்டு ஒழுகுதலால்,

அவ் வேடர்கள் தங்கள் கீழ் நிறையில் நின்று வெளியேறிப் பெரு நிறையைப் பற்றியதால் சிற்றறிவு நீங்கி—சிறு தன்மை நீங்கி அவர்களை

பட்டினத்துக்கு பட்டின மாகிய உடலுக்கு காவலாளர்களாய் ஏவலாளர் களாய் அமைகின்றூர்கள்.

கள்ளனே காப்பவ ஞயினன்; காவலாள ஞயினன். இதனல் மனமே மதியாய் மதி என்னும் மந்திரியாய் அமைகின்றது.

விவகாரத்தில் — விவகரிப்பதனல் இரண்டு என நின்ற—இரண்டு எனக் கருதப் பட்ட—பேசப் பட்ட மனமும் மதியும் ஒன்றே ஆயின.

ஒன்றே ஆனபோது இருந்தது எது? இல்லாதது எது? மனம் இறந்த இடம் இதுவே ஆம்.

அத்துவிதம் என்னும் பேத பாவனே அற்ற இடம் — தன்னிலே முன்னிலே ஒன்றிய இடம் இதுவே.

## திருவாசகம்.

———

பேத மில்லதோர் கற்ப ளித்த பெருந்து
[றைப்பெரு வெள்ளமே
ஏத மேபல பேச நீயெனே யேதி லார்முன
[மென்செய்தாய்
சாதல் சாதல் பொல்லாமை யற்ற தனிச்ச
[ரண்சர ணுமெனக்
காத லால்உனே யோத நீவந்து காட்டி
[ஞய்கழுக் குன்றிலே.

(ஷை திருக்கழுக்குன்றப் பதிகம்— பாசு.6.)

என்றனர் மணிவாசகப் பிரபு

மனமும் மதியும் ஒன்றிய இடம் இதுவே ஆம்.

"சாதல் சாதல்" — தோற்றமும் ஈறும். "பொல்லாமை அற்ற"—மல ரஹிதமான. சரண்—திருவடி—அமல ஐகாரம். "காதலால் உனே ஓத" என்பது காமம் ஆட்சி பெற்றுக் காதல் கைவரப் பெறுதலால் அமல நாதங்க ளாகிய வேதங்களே ஓதுதலே உணர்த்தி நின்றது.

"காதலாகிக்கசிந்துகண்ணீர்மல்கிஓதுவார்"

என வாய்மையயான வேதங்களே ஓதுவார் இலக்கணத்தை ஞான சமபந்தர் அருளியதும் அறிக.

"உனே ஓத" என்பது அமல ஐகார மாகிய வேத வடிவினன் இறைவனே என்பதனே உணர்த்தி நின்றது.

ஐம் பொறிகள்—ஐம்புல வேடர்கள் மாற்ற மடைதலால், மனமும் மதியும் ஒன்றுதலால்—மனமே மதி யாதலால் —மதி மந்திரி யாதலால்,

பட்டினம் காவலாயிற்று — கள்ளப் புலன்களாகிய ஐம்புல வேடர்களே காவலாளர் ஆயினர் — மணி விளக்கம் ஆயினர் — உடலும் ஊனம் ஒழிந்து எம் பெருமான் திருக் கோயிலாய்— ஞான சத்தி வடிவமாய் நித்திபத்துவம் பெறுவ தாயிற்று என்னும் இவ் உண்மையையே பின் வரும் பிரபல சுருதிகள் நன்று வலியுறுத்து கின்றன.

## திருவாய்மொழி.

———

உற்றவுறுபிணிநோய்காளுமக்கொன்று
[சொல்லுகேன்கேண்மின்
பெற்றங்கள்மேய்க்கும்பிராஞர்பேணுந்
[திருக்கோயில்கண்டீர்
அற்றமுரைக்கின்றேனின்னமாழ்வினே
[காள்உமக்கிங்கோர்
பற்றில்லேகண்டீர்நடமின்பண்டன்று
[பட்டினங்காப்பே.

கொங்கைச்சிறுவரையென்னும்பொதும்
[பினில்வீழ்ந்துவழுக்கி
அங்கோர்முழையினில்புக்கிட்டழுந்திக்
[கிடந்துழல்வேனே
வங்கக்கடல்வண்ணனம்மான்வல்வினே
[யாயினமாற்றிப்
பங்கப்படாவண்ணஞ்செய்தான்பண்டன்று
[பட்டினங்காப்பே

ஏதங்களாயினவெல்லாமிறங்கவிடுவித்து
[என்னுள்ளே
பீதகவாடைப்பிராஞர்பிரமகுருவாகிவந்து
போதில்கமலவன்னெஞ்சம்புகுந்துமென்
[சென்னித்திடரில்
பாதவிலச்சினேவைத்தார்பண்டன்று
[பட்டினங்காப்பே.

( ஷை செய்குடத்தை செ. 6, 7, 8. )

## திருமந்திரம்.

———

உள்ளம் பெருங்கோயி லூனுடம் பாலயம்
வள்ளற் பிராஞர்க்கு வாய்கோபு ரவாசல்
தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவ
[லிங்கம்
கள்ளப்புலனேந்துங் காளாமணி விளக்கே

(ஷை 7ம். தந் சிவபூசை மந். 1.)

மெய் யடியார் மாண்பினே அறியாத பிறர் அவர்க்குத் தீமை விளேத்துச் சிவாபராதிகள் ஆகுமிடத்து,

அத் தீமை தம்மைச் சாரா திருத் தற்பொருட்டும் அவரைத் தண்டித் துப் புனிதராக்குதற்கும் அம் மெய் யடியார் வெகுளியால் கைக் கொள் ளும் தண்டமாகிய உபாயமும்

"தீமை அச்சுறுத்தலும்"

என்பதில் அடங்கும் எனக் கூற ஆம்.

மதுரையம் பதியில் ஞான சம்பந் தப் பெருமான் அடியார் கூட்டத் தோடு எழுந்தருளி யிருந்த திரு மடத்துக்கு அக்காலச் சமணர் தீக் கொளுவிய ஞான்று,

அப் பெருமான் அச் சமணரது அதிக் கிரமத்துக்குக் காரணஞன பாண்டியன் பால் அத் தீப்பிணியைப் பையவே செல்க என விடுத்துத் தமக் கும் மற்றைய அடியார்க்கும் தீமையை அச்சுறுவித்து,

பின்பு அப் பாண்டியனேயும் பிணி தீர்த்து ஆட்கொண்டு அப் பாண்டி யன் வாயிலாக அச் சமணப் பாதக ரைத் தண்டித்து அத் தீவினேயையும் போக்கி அவரை நன் னெறிக்கண் உய்த் தமையால்,

அன்னவர் வெகுளியால் ஆய நன்

மை வெள்ளிடை ஆம்.

இவ்வாறு வரும் எடுத்துக் காட்டுக்கள் பல. விரிப்பிற் பெருகும்.

"பெருமை பேணலும்"

பெருமை பேணல் — உடலகத்து ஆகாச பூதம் பேணப் படுதல்.

பரிபாடல் நான்காம் பாடலில் (அடி 30) அகலம் என்பதற்குப் பெருமை எனப் பொருள் கூறப்பட்டது.

ஈண்டுப் பெருமை என்பது அகலம் என்னும் பொருட்டாய் ஆகாசத்தை உணர்த்தி நின்றது.

"நேரா நட்பு., என்னும் சூக்தத்தால்(மூவடி முப்பது—பொருட் கூறு, சூக்தம் 4) இயக்கம் எனும் ஒலியாகிய நாதம், தான் அடைந்த தூய்மை நிறைக்கு ஏற்ப பிருதிவியாகிய தூலத்தைப் பற்றிய கேண்மையினால் கேண்மை என்னும் நேரா நட்பினால்,

அத் தூலத்தை இடமாகக் கொண்டு இயக்கத் தன்மை கெட்டு ஆகாயம் என அமர்ந்து சிறிது சிறிதாக ஒக்கம் பெற்று சிதாகாசம் நிறைந்த சிறிய பாத்திரம் என விளங்கும்படி அத் தூலத்தை விளை வேற்றும் என்று கூறப் பட்டது.

இப் பெற்றி கைகூடப் பெறுதல் — சிதாகாசம் பேணப் படுதல் வெகுளி என்னும் சத்துவ ரசோ குணத் தலைமை உடைமையால் உளூற்றப் படும் சாதகங்களாற்றான் அமைய வேண்டும் என இச் சூக்தத்தால் கூறி யருளினர் ஆசிரியர்.

இஃது எவ்வாறு? எனின், சிறிது கூறுதும்.

வெகுளி எனப்படும் சத்துவ ரசோ குணத் தலைமை மரபுடையோர் தவத்திற குரிய நன்னெறியை மேற்கொண்டு — ஒழுக்கம் பூண்டு கர்ம க்ஷயம செய்ய உரிமை யுடையர்.

கர்மத்தால் கர்மத்தை க்ஷயம் செய்ய வேண்டும்.

இது சொல்வதற்கு எளிதேயன்றிச் செய்வதற்கோ மிக அரிது. ஒழுகுவது என்னும் அத்தியாயம் மகா கடினம்; சாதிப்பதும் அன்னதே !

சங்கார கிருத்தியமே ரக்ஷகத்துவம்.

அவவினையைச் சங்கரித்தலால் நல்வினை தழைக்கும் அன்றோ !

மந்திர கர்மத்தால் மகங்கள் விளைத்து அம் மகங்களைத் தன்னிலையிலும் விளைத்து ஆரோகணம் பெற வேண்டும். பெற்றப் பூம் புகலூரை அடைய வேண்டும்.

அவ் ஊர் தான் "மேய் உரன் இல்" என்பது; மெய்யாகிய உரனை உடையதாகிய விமல யாக்கை என்பது. பூ — சுத்தமான புகல் — புகலும் படியான உள்ளம் என்னும் வாக்கினிடத்து அமர்ந்த புண்ணியனாகிய மதியை மதியாகிய பதியை பூம் புகலூர்ப் புண்ணியன் என்பர் பெரியார்.

"பூம்புகலூர் மேவிய புண்ணியனே"

என்றனர் எமது அப்பர்.

பூ மணம் எழுந்த — பூ மணம் போலும் சிவ மணம் எழுந்த (பூ) சுத்தமான தேகத்தினிடம் அமர்ந்த பதி — மதி — ஆசான் குண்டலியை — குண்டலி என்னும் மாயையை —ஆடரவை ஆபரணமாகப் பூண்டனன்.

இக் காலத்தில் இயற்கை யாகவே கீழ் நோக்கிய குண்டலி மேல் நோக்கி நிற்கும். இஃ ஞான்று வாய்மையான சத்துவம் திகழும்.

சத்துவத்தில் ரசோ குணம் தீண்டினால் உடலில் ஆகாச பூதம் பெருக்க மடையும்—பேணப்படும். ஞானாகாசம் பெருக்க மடையவே ஞான சத்தி வடிவம் உளதாகும். சதமாய் நிற்பது எனப் பொருள் படும் சதா சிவப் பேறு உளதாகும். இதுவே குரு சொரூபம்.

ஞான சத்தி வடிவமே ஓ வடிவம் எனப் படும் பிரணவ சரீரம். சீவன் முத்தி நிலை பூரணப் பட்டோர்க் குரிய இவ் வடிவமே நித்தியத்துவம் பெறுவது.

உடலில் ஆகாச பூதம் பெருக்க மடைதலே சிதாகாச வடிவினனாகிய எம் பெருமான் (பிரமம்) உடலிற் குடி புகுதல் என்பதன் உண்மை யாகும்.

வெகுளி என்னும் சத்துவ ரசோ குணத் தலைமையால்

"பெருமை பேணல்"

என்பதனால் குறிக்கப் பட்ட ஆகாச பூதம் பேணப் படுதலின் பண்பும் பயனும் இவையே ஆம்.

மெய் யடியார்க் குரிய இத் தகைய வெகுளியால் சிறிதும் தீமை யன்றி நன்மையே உளதாகும் என்பாராய்,

"நன்றே"

என இச் சூக்தத்துக்கு முற்றுத் தந்தனர் புலவர்.

"நேரா நட்பு" என்னும் சூக்தத்தால் உடல் ஆகாச பூதம் பெருக்க மடைதற் குரிய பாத்திர மாகும் எனக் கூறிய புலவர் "வெகுளி" என்னும் இச் சூக்தத்தால் அவ் ஆகாச பூதம் பேணப் படுதற் குரிய சாதகம் இது எனச் சுருங்கக் கூறி விளங்க வைத்தனர் என அறிதற் பாற்று. மேலும் விரிப்பிற் பெருகும்.

இது காறும் கூறியவைகளால் மூவடி முப்பது என்னும் அரிய பெரிய தமிழ் மறையில் அறக் கூறு என்னும் மூன்றும் அத்தியாயத்தில் ஐந்தாம் சூக்த மகுட மாகிய "வெகுளி" என்பதன் பண்பும் பயனும் ஷெ சூக்தம் முதலிய வாற்றான் ஒருவாறு உணரத் தகும்.

சுபம்.

Imprimerie "VITTAGAM" -- Pondichéry. Le Directeur-Gérant. R. N

# திருவாசக உண்மை

யாழ்ப்பாணம், தென்கோவை தமிழ்ப்பண்டிதர்

## ஸ்ரீமாந் ச. கந்தையபிள்ளை

(வித்தகம் பேராசிரியர்)

அவர்களால் எழுதப்பட்டது.

கடவுள் தமது அருமைத் திருக்கரத்தால் எழுதி அகில சீவர்கள் உய்யும் பொருட்டு உதவியருளியதும், மாணிக்கவாசகர் அருளிச் செய்ததும் தெய்வத் தமிழ் வேதமுமாகிய திருவாசகத்தின் உண்மைக் கருத்துக்களை நன்கு விளக்கி வசன நடையில் எழுதப்பட்டது.

வேண்டுவோர் 0—2—9 அணா தபால் முத்திரைப் அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம்.

**நந்தி வெளியீட்டு மன்றம்**

**புதுவை.**

## TOWARDS TRANSCENDENCE.

Vedanta Kesari Madras, Writes:—

"The book speaks of undiscovered possibilities hidden in the deeper reaches of the mind which could be brought into the conscious plane by a process of Transcendance of the various lower planes by which man becomes the superman possessed of great psychic powers, and later emerges with a still higher order of consciousness, as a Divine Personality."

Price As. 12.

**Nandhi Publishing House**
PONDICHERRY.

## இறும்! இறும்!

## சுத்த சாதகம்

வேண்டுவோர் தபால் முத்திரை செலவுக்கு உரிய 6 சதம் அல்லது 1 அணா ஸ்டாம்பு அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம்.

நந்தி வெளியீட்டு மன்றம்.

புதுவை.

## BOOKS BY SRI AUROBINDO

| | RS. | AS |
|---|---|---|
| The Superman ... | 0 | 6 |
| Evolution ... | 0 | 8 |
| Thought and Glimpses ... | 0 | 9 |
| A System of National Education ... | 1 | 0 |
| The ideal of the Karmayogin ... | 1 | 10 |
| ssays on the Gita | | |
| First Series ... | 5 | 0 |
| Second Series .... | 7 | 8 |
| Isha Upanishad .... | 1 | 8 |
| Ideal and Progress ... | 1 | 0 |
| War and Self-Determination .... | 2 | 0 |
| The Renaissance in India ... | 1 | 12 |
| The National Value of Art .... | 0 | 8 |
| Uttarapara Speech .... | 0 | 4 |
| Kalidasa .... | 1 | 0 |
| Yogic Sadhan .... | 1 | 0 |
| The Yoga and its object .... | 0 | 12 |
| The Mother .... | 1 | 0 |
| The Riddle of this World.... | 2 | 0 |
| The Teaching and the Asram of Sri Aurobindo.... | 0 | 10 |
| Songs to Myrtilla .... | 1 | 4 |
| Baji Prabhu .... | 0 | 10 |
| Sx Poems of Sri Aurobindo .... | 1 | 4 |
| Lights on Yoga .... | 1 | 4 |

NANDHI
PUBLISHING HOUSE
PONDICHERRY.

## "வித்தகம்" முதல் வருட, இரண்டாவதுவருட சஞ்சிகைகள் புத்தகமாக கட்டப்பட்டன.

ஒவ்வொன்றும் விலை ரூபா 3-8-0

தபால் செலவு பிரத்தியேகம்.

## விஷய அட்டவணை.

### முதல் வருட தலையங்கங்கள் (Editorials)

1 எமது கொள்கை.
2 சைவ சமயம்
3 தத்துவப்பெரியார் நூல்கள்
4 எழுதாமறை
5 குருநெறி
6 வேதாகமங்கள்
7 இருக்கு வேதம்
8 தமிழ் நெடுங் கணக்குத் திருத்தத் தீர்மானம்
9 திருவருணாட்டம்
10 நாதம்
11 அமல ஐகாரம்
12 அறமுதல் நாற் பொருள்
13 இல்லறம்
14 அன்னம்
15 துப்புரவு
16, 17 மனைவி
18 பொருள்
19 அருந்தல் பொருந்தல் அனந்தல்
20 உடம்பின் பயன்
21 இடம்பட வீடெடேல்
22 காருண்ணியம்
23 முயற்சி
24 விதேக முத்தி சதேக முத்தி
25 நான் மறை
26 பிரம சரியம்
27 இந்து மதம்
28 அடியார் பெருமை
29 நிறை
30 அடியார் இயல்
31 அருணோதயம்
32 யோகம்
33 அன்பு
34 பணி செய்து கிடத்தல்
35 அருள்
36 சகச நிட்டை
37 பாச பதம்
38 மாற்றிப் பிறத்தல்
39 கற்பனை
40 சமாதி
41 பண்டைக் காலப் பௌத்த சமணரும் தற்காலச் சைவரும்
42 அறஞ்செய விரும்பு
43 நிறை முறை இல்லாக் கற்பனை
44 சங்கச் சான்றோர் நூல்கள்
45 தூல சூக்கும சம்பந்தம்
46 பதி பசு பாச உண்மை
47 வீடு பெற நில்
48 சண்டேசுரப் பேறு
49 காயசித்தி
50 ஆரியரும் தமிழரும்
51 வித்தகம் பேசேல்

### தொடர்ச்சியான கட்டுரைகள்.

தலையாய அறம்.
உடம்பின் அருமை பெருமை
இருக்கு வேத உண்மை சீதையை வந்தித்தல்
ஆரியனும் தமிழும்.
ஈழநாடும் தமிழும்.
நத்தம்போல் கேடு" என்னும் குறளுரை.
உயிர் வருக்கம்
உடலுயிரிர் சம்பந்தம்.
பெண்பாற் புலவர்கள்.

### இரண்டாவது வருட தலையங்கங்கள் (Editorials)

1 எமது பத்திரிகை
2 கல்வி
3 சிவமும் விஷ்ணுவும்
4 கேள்வி முயல்
5 காமேசன்
6 சோம்பித்திரியேல்
7 இடம்பொருள் ஏவல்
8 கற்பெனப்படுவது சொற்றிறம்பாமை
9 வேதாந்தம் சித்தாந்தம்
10 சுழினை
11 மலபரிபாகம்
12 இருவினை ஒப்பு
13 விட்ட குறை
14 இராப் பகலற்ற இடம்
15 அரவமாட்டேல்
16 ஆலயந் தொழுவது சாலவும் நன்று
17 விருந்திலோர்க்கில்லை பொருந்திய ஒழுக்கம்
18 ஒத்த இடத்து நித்திரை கொள்
19, 20 ஓதுவதொழியேல்
21 ஆறுவது சினம்
22 மறைக்காட்டுக் கதவு திறத்தல்
23 உடையது விளம்பேல்
24 ஈவது விலக்கேல்
25 ஈயார் தேட்டைத் தீயார் கொள்வர்
26 ஐயமிட்டுண்
27 குற்றம் பார்க்கில் சுற்றமில்லை
28 சிவத்தைப் பேணில் தவத்திற்கழகு
29 நிற்கக் கற்றல் சொற்றிறம்பாமை
30 பொருடனைப்போற்றி வாழ்
31 சூது விரும்பேல்
32 அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்
33 மாரியல்லது காரியமில்லை
34 பூமி திருத்தி யுண்
35 வைசயொத திருந்தால் செய்வன செய்
36 ஒருவனைப்பற்றி ஓரகத்திரு
37 ஊக்கமது கைவிடேல்
38 இல்லறமல்லது நல்லறமன்று
39, 40 கேட்டிலுறுதி கூட்டுமுடைமை,
41 மெல்லினல்லாள்தோள் சேர்
42 கைப்பொருடன்னின் மெய்ப் பொருள் கல்வி
43 தெய்வமிகழேல்
44 மோனமென்பது ஞான வரம்பு
45 சுற்றத்திற்கழகு சூழவிருத்தல்
46 கீழ்மை யகற்றுயும்
47 தேடாதழிக்கிற்பாடா முடியும்
48 ஊருடன் பகைக்கின் வேருடன் கெடும்
49 நீரகம் பொருந்திய ஊரகத் திரு
50 நல்லிணக்கமல்லது அல்லற்படுத்தும்
51 மீதூண் விரும்பேல்
52 சனி நீராடு
53 காப்பது விரதம்
54 வானஞ் சுருங்கில் தானஞ் சுருங்கும்

### தொடர்ச்சியான கட்டுரைகள்.

ஸர் ஜகதீஸ்சந்திரவஸு அவர்கள் செய்த பிரசங்கம்
சும்மா கிடந்த சங்கை ஊதிக் கெடுத்தான் ஆண்டி
அயிக்கவாதம் பேசிப் பயிக்க வாதம் புரியும் அறிவிலிகளுக்கு வாய்ப் பூட்டு
பொ. முத்தையா பிள்ளை, உண்மை முத்தி நிலை ஆராய்ச்சி
உண்மை முத்தி நிலை ஆராய்ச்சி மறுப்பு.
ஈழநாடும் தமிழும்
உடலுயிர் சம்பந்தம்
பெண்பாற் புலவர்கள்
ஸ்ரீ காஞ்சி காம கோடி பீடத்திற்குரிய உத்கிருஷ்டம் நான்கின் ஆராய்ச்சி
20-ம் நூற்றாண்டின் இணையற்ற விஞ்ஞானம்.

Imprimerie "VITTAGAM" -- Pondichéry. Le Directeur-Gérant. R. Nagarattinam.